இந்தியாவிற்கான திறமை தேடல்

# ழகரம்

தை மாத சிறப்பிதழ்



இனி ஒரு விதி செய்வோம் !!!

# பொருளடக்கம்


க கவித்தொகுப்பு

உ தைத்திருநாள்

ங உங்களுக்கு தெரியுமா ?

ச தமிழ்நாடு-38 மாவட்டங்களின் அகழ்வாராய்ச்சி

ரு ஒப்பாரி பாடல்கள்

சா தமிழரின் பாரம்பரிய காதணி

எ அம்மானை விளையாட்டு

அ பாரி வேட்டை

கூ மறைந்த தமிழ் தூண்கள்

க0 பனைமலை கிரீஸ்வரர் கோவில்

கக புதிர் நேரம்

# கவித்தொகுப்பு

## தமிழகத்தின் அம்சங்கள்

தமிழகத்தின் அம்சங்களை ஆயிரம்
புத்தகங்கள்கூட சொல்ல முடியாது
கையளவில் இந்த புத்தகம் சின்னஞ்சிறு
சேதிகளை சுமந்து உங்களை தேடி பறக்க
தொடங்கிவிட்டது.
நான் ஒரு விவசாயியாக இருந்தால்
காலை பனியோ காதடைக்க,
வயலில் நெற்கதிர்கள் சாய்ந்திருக்க
அறுப்பறுக்க பெண்களோ நிலத்தை பார்த்து
காத்திருக்க .
இன்று பொங்கல் பெருவிழா
தெருக்கள் எல்லாம் கோலங்கள் ஜொலிக்க
பாதையெல்லாம் கரும்பும் எறும்பும் ஒட
பாரெங்கும் பொங்கலோ பொங்கல் என ஒலிக்க
..தமிழ் மணக்க
வாருங்கள் தமிழோடு ஒரு பொங்கல் பெருவிழா
கொண்டாடலாம்

- ர.ரோஷினி

# தைத்திருநாள்



தைத்திருநாள் அல்லது பொங்கல் என்பது தமிழர்களின் மிக முக்கியமான பாரம்பரிய திருநாளாகும்.

”உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்

மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்வார்”

இது தமிழர் பண்பாடு, வேளாண்மை, இயற்கை வழிபாடு மற்றும் நன்றி உணர்வை வெளிப்படுத்தும் விழாவாகும். ஒவ்வொரு ஆண்டும் தை மாதம் முதல் நாள் (ஜனவரி 14 அல்லது 15) அன்று பொங்கல் கொண்டாடப்படுகிறது. இந்த திருநாள் நான்கு நாட்கள் கொண்டாடப்படுகிறது: போகி, சூரிய பொங்கல், மாட்டு பொங்கல், காணும் பொங்கல்.

தமிழ் நாட்காட்டி படி, மார்கழி மாதம் முடிந்து தை மாதம் தொடங்கும் நாள் தை 1 ஆகும். இந்த நாளில் சூரியன் மகர ராசியில் (மகர சங்கராந்தி) நுழைகிறது. இதனை உத்தராயணப் புண்ணிய காலம் என அழைக்கின்றனர்.

தை மாதம் விவசாயிகளுக்கு மகிழ்ச்சி தரும் காலம் அறுவடை முடிந்த பின் ஓய்வு பெறும் நேரம் புதிய தொடக்கங்களுக்கான சிறந்த மாதம் அதனால் தான் தமிழர்கள் ”தை பிறந்தால் வழி பிறக்கும்* என்ற பழமொழியை கூறுகிறார்கள்.

## ஏன் சூரிய பொங்கல் கொண்டாடப்படுகிறது?

சூரிய பொங்கல் என்பது சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாள் ஆகும். விவசாயம் முழுவதும் சூரிய ஒளியையே சார்ந்துள்ளது.

### காரணங்கள்

பயிர்கள் வளர சூரிய ஒளி அவசியம் மழை, காலநிலை சுழற்சியை சூரியன் நிர்ணயிக்கிறான் அறுவடை பெற சூரியனின் பங்கு மிக முக்கியம்

### அதனால் விவசாயிகள்

புதிதாக அறுவடை செய்த நெல், பால், வெல்லம் சேர்த்து "பொங்கல்" சமைத்து சூரியனுக்கு படைக்கின்றனர் "பொங்கலோ பொங்கல்!" என்று கூறுவது மகிழ்ச்சியும் வளமுமாக வாழ்க்கை பொங்க வேண்டும் என்பதற்கான குறியீடு.

## மாட்டு பொங்கல் கொண்டாடப்படுவதற்கான காரணம்:

மாட்டு பொங்கல் என்பது விவசாயத்தில் உதவும் கால்நடைகளுக்கு நன்றி செலுத்தும் நாள்.


விவசாயத்தில் மாடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன நிலம் உழுதல், சுமை ஏற்றுதல் போன்ற பணிகளில் உதவுகின்றன விவசாயியின் நண்பன் போல இருப்பவை

இந்த நாளில்:

மாடுகளை குளிப்பாட்டி கொம்புகளுக்கு வண்ணம் பூசி மாலை அணிவித்து சிறப்பு உணவு கொடுக்கப்படுகிறது

இது மனிதன் - விலங்கு இயற்கை இடையேயான உறவை காட்டுகிறது.







# உங்களுக்கு தெரியுமா?

## ஏன் பொங்கல் மண் பானையில் வைக்கப்படுகிறது?





இதற்கு பின் சில விஞ்ஞானமும் இருக்கிறது

பொங்கல் சமைக்க மண் பானை பயன்படுத்துவது ஒரு ஆழ்ந்த பொருள் கொண்ட பழக்கம். இயற்கையோடு இணைந்த வாழ்க்கை மண் இயற்கையின் ஒரு பகுதி வேதிப்பொருள் இல்லாதது.

மண் பானை வெப்பத்தை சமமாக பரப்பும் உணவின் சுவையும் சத்தும் பாதுகாக்கப்படும் பண்பாட்டு அடையாளம்

பழங்காலத்தில் அனைவரும் மண் பாத்திரங்களையே பயன்படுத்தினர்

தமிழர் மரபை நினைவுபடுத்துகிறது வளத்தின் அடையாளம் பால் பொங்கி வெளியே வருவது "வீட்டில் செல்வம் பொங்கும்" என்ற நம்பிக்கையை குறிக்கிறது

பொங்கலோ பொங்கல் பால் பொங்கப் பொங்கல் செல்வம் எல்லாம் வீட்டில் பொங்கல்

மனிதர்கள் வேட்டையாடி–சேகரிக்கும் வாழ்க்கையிலிருந்து விவசாய வாழ்க்கைக்கு மாறியபோது
தானியங்கள், தண்ணீர், உணவு ஆகியவற்றை சேமிக்க தேவையாயிற்று.

அப்போது இயற்கையில் எளிதாக கிடைத்த மண்ணை பயன்படுத்தி பாத்திரங்கள் செய்யத் தொடங்கினர்.

இந்தியாவில், குறிப்பாக சிந்துவெளி நாகரிகம்,
சங்க கால தமிழர்கள் காலத்திலிருந்தே மண் பானை பயன்பாடு இருந்தது.
மனிதர்களின் தேவை + இயற்கையுடன் இணைந்த வாழ்வு + பாரம்பரிய அறிவு இவற்றின் மூலம் மண் பானையின் பழக்கம் உருவானது.

# தமிழ்நாடு -38 மாவட்டங்கள் & அகழ்வாராய்ச்சி

1. அரியலூர் - கங்கை கொண்ட சோழபுரம்

2 செங்கல்பட்டு -மாமல்லபுரம்

3. சென்னை - மயிலாப்பூர்

4. கோயம்புத்தூர் -பேரூர

5. கடலூர் - பூம்புகார் (அருகில்)

6 தருமபுரி - தீர்த்தமலை

7. திண்டுக்கல் - பழனி

8. ஈரோடு -கொடுமணல்

9. கள்ளக்குறிச்சி கரடிக்கல்

10 காஞ்சிபுரம் - உத்திரமேரூர்

11. கன்னியாகுமரி - கொற்கை (வரலாற்று துறைமுகம்)

12 கரூர் - வஞ்சிபுரம்

13. கிருஷ்ணகிரி- மல்லாசந்திரம்

14 மதுரை - கீழடி

15. மயிலாடுதுறை - பூம்புகார்

16. நாவலூர் / நாமக்கல் மொஹூர்

17. நாகப்பட்டினம் -காவிரிப்பூம்பட்டினம்

18. நீலகிரி - தொரப்பள்ளி

19. பெரம்பலூர் - குரும்பலூர்

20. புதுக்கோட்டை - கீழடி



**21.** ராமநாதபுரம் - ஆதிச்சநல்லூர்



**22.** ராணிப்பேட்டை - மேல்பாடி

**23.** சேலம் - தீர்த்தமலை



**24.** சிவகங்கை - திருப்பத்தூர்

**25.** தென்காசி - சங்கரன்கோவில்



**26.** தஞ்சாவூர் - திருவையாறு

**27.** தேனி - ஆண்டிப்பட்டி

**28** திருப்பத்தூர் - ஜம்பை



**29.** திருவள்ளூர் - வீரராகவபுரம்

**30.** திருவண்ணாமலை - ஜம்பை

**31.** திருவாரூர் - அழகர்கோவில் (சுற்றுப்பகுதி)



**32.** திருச்சி - உறையூர்



**33.** திருநெல்வேலி - கொற்கை

**34.** திருப்பூர் - கொடுமணல் (அருகில்)

**35.** தூத்துக்குடி - ஆதிச்சநல்லூர்



**36.** வேலூர் -வள்ளிமலை

**37.** விழுப்புரம் - சிங்கவரம்

**38.** விருதுநகர் - காரியாபட்டி

# ஒப்பாரி பாடல்கள்



தாய், தந்தை, கணவன், பிள்ளை, உற்றார், உறவினர் எவரேனும் இறந்து விட்டால் ஒருவருடைய உள்ளத்தில் எழுகின்ற துன்ப உணர்வை வெளிக்காட்ட ஒப்பாரி பாடப்படுகிறது. இறந்தவர்களின் வரலாறு பற்றித் தெரியாதவர்கள் அப்பாடல் மூலம் வரலாற்றினை அறிய முடியும்.



**"இளிவே இழவே அஃசவே வறுமையென**

**விளியில் கொள்கை அழுகை நான்கே"**

என்று அழுகைப்பாட்டிற்கு இலக்கணம் கூறுகிறார் தொல்காப்பியர்.

ஒப்பாரிப்பாடலை, "கையறு நிலை " என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.


ஒப்பாரி பாடல் என்பது இசையாக மட்டுமின்றி இது மனித உணர்வுகளின் இன்பம், துன்பம் போன்று மனதில் தோன்றும் எண்ணங்களும் அதன் உருவமே வார்த்தைகளாகும் அவ்வார்தையை உணர்ச்சியோடு கொண்டு செல்ல இசைக் கருவிகள் இணைந்து கேட்போரின் மனதை இரணமாக்குகிறது. இது முற்றிலும் பெண்கள் பாடும் முறையில் இருந்தது இன்று நாளடைவில் ஆண்களும் பாடுகின்றனர்.

இன்றளவும் ஒப்பாரி பாடல்கள் இலங்கையில் வாழும் மக்களால் பின்பற்றி வரப்படுகிறது தமிழ்நாட்டிலும் ஒப்பாரி பாடல்கள் இன்றளவும் பாடப்படுகிறது.

ஒப்பாரிப் பாடல்களின் இசை, விளம்பமும் மத்யமும் கலந்த ஒரு லய

அமைப்பில் முகாரி, ஆகிரி முதலான இராகச் சாயலுடன் விளங்குகின்றது.

# தமிழரின் பாரம்பரிய காதணி



பொங்கல் திருநாளில் தொங்கட்டான் – தமிழரின் பாரம்பரிய காதணி
தமிழர் பண்பாட்டில் ஆடை மற்றும் அணிகலன்கள் வெறும் அலங்காரப் பொருட்களாக அல்லாது, வாழ்வியல் மரபுகளின் அடையாளங்களாகத் திகழ்கின்றன. அவற்றில் முக்கியமான ஒன்றாக "தொங்கட்டான்" எனப்படும் பாரம்பரிய காதணி விளங்குகிறது. குறிப்பாக பொங்கல் போன்ற விவசாயத் திருநாள்களில், தொங்கட்டான் தமிழரின் பாரம்பரிய பெருமையையும் கலாச்சார அடையாளத்தையும் வெளிப்படுத்துகிறது.




தொங்கட்டான் என்பது பொதுவாக ஆண்கள் அணியும் பாரம்பரிய காதணி ஆகும். காதின் கீழ்ப்பகுதியில் தொங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டதால் அதற்கு "தொங்கட்டான்" என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

பழங்காலத்தில் தங்கம், வெள்ளி அல்லது பித்தளையில் செய்யப்பட்ட இந்த அணிகலன், வீரத்தையும் ஆண்மையையும் சமூக அடையாளத்தையும் குறிக்கும் சின்னமாகக் கருதப்பட்டது,

கிராமப்புற வாழ்க்கையில் விவசாயம், கால்நடை வளர்ப்பு, காவல் போன்ற பணிகளில் ஈடுபட்டிருந்த ஆண்கள், திருவிழா மற்றும் பண்டிகை நாட்களில் தொங்கட்டான் அணிவதை ஒரு பெருமையாகக் கொண்டிருந்தனர். குறிப்பாக வேட்டி, அங்கவஸ்திரம், தலைப்பாகை போன்ற பாரம்பரிய உடைகளுடன் தொங்கட்டான் அணிவது தமிழர் மரபின் அழகை மேலும் உயர்த்தியது.

பொங்கல் என்பது உழைப்புக்கும் இயற்கைக்கும் நன்றி செலுத்தும் திருநாள். இந்த விழாவின்போது பாரம்பரிய உடைகளுடன் தொங்கட்டான் அணிவது, தமிழர் பண்பாட்டின் உயிரோட்டத்தை நினைவூட்டுகிறது.



மாட்டு பொங்கல், காணும் பொங்கல் போன்ற நாட்களில் இத்தகைய அணிகலன்கள் கிராமிய கலாச்சாரத்தை உயிர்ப்புடன் வெளிப்படுத்துகின்றன.

இன்றைய நவீன வாழ்க்கை முறையில் தொங்கட்டான் போன்ற பாரம்பரிய அணிகலன்கள் மெதுவாக மறைந்து வருகின்றன. ஆனால் பொங்கல் போன்ற விழாக்கள், நமது மரபை நினைவூட்டுகிறது .












# தமிழர் விளையாட்டுகள்







# பாரி வேட்டை

இது ஒரு விழாக்கால விளையாட்டு.

பாரி - குதிரை தமிழ் நாட்டில் சித்திரா பௌர்ணமி அன்று நடக்கப்படும் விளையாட்டு. வீரர்கள், விலங்குகள் போல வேடமணிந்தும் அட்டை ஆயுதங்கள் கொண்டும் நாடகம் நடிக்கும் ஒரு விளையாட்டு ஆகும்.

வீரர்கள் குதிரையின் மீதேறி வனத்திற்கு சென்று வேட்டையாடுதல் போன்றும் விலங்குகள் பதுங்குவது போன்றும் உயிரோட்டமாக நடித்து காட்டுவார்கள்.






*இதில் தமிழர்களின் வீரம், வேட்டைமுறை போன்றவை வெளிப்படுகின்றன*

.

காடுகளுக்கு செல்லாதவர்களும் கூட காட்டையும் காட்டு விலங்குகள் பற்றியும் அறிந்து கொள்ள உதவுகிறது. இதனை குழந்தைகள் மிகவும் விரும்பி ரசித்து பார்ப்பார்கள்.

அம்மானை என்பது தமிழகத்தின் தொன்மையான மற்றும் பாரம்பரியமான விளையாட்டுக்களில் ஒன்றாகும். இது பெரும்பாலும் பெண்களால் விளையாடப்படும் ஒரு வகை பந்து விளையாட்டு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிறிய மரப்பந்துகளை அம்மானை காய்கள் காற்றில் தூக்கிப் போட்டு அவை கீழே விழாதபடி ஒன்றன் பின் ஒன்றாகப் பிடித்து மீண்டும் மேலே எறிந்து விளையாடுவதாகும்

அம்மானை விளையாடும் போது பெண்கள் பாடும் பாடல்கள் அம்மானை வரி என்று அழைக்கப்படுகின்றன. விளையாட்டின் வேகத்திற்கு ஏற்ப தாளக்கட்டுடன் இந்தப் பாடல்கள் அமையும்





# அம்மானை விளையாட்டு

## விண்ணைத் தொட்டு மண்ணில் விழும் முத்துக்களின் சங்கீதம்






# பனைமலை கிரீஸ்வரர் கோவில்



விழுப்புரம் மாவட்டம் பனைமலை கிராமத்தில் பல்லவன் மன்னர்கள் காலத்தில் 1300 ஆண்டுகள் முன்பு, 8ஆம் நூற்றாண்டில்,

இராசசிம்மன் என அழைக்கப்பட்ட இரண்டாம் நரசிம்ம பல்லவன் என்ற பல்லவ மன்னனால் கட்டப்பட்ட பழமையான கற்றலை கோவில்(கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி கட்டிடம் எழுப்புவது)தான் இந்த மலை கோவில் தான் கிரீஸ்வரர் கோவில்.

இந்த கோவிலுக்கு மன்னர் இட்ட பெயர் தலகிரீஸ்வரர் , இதன் பொருள் பனை மரங்களால் மூடப்பட்டிருக்கும் மலையில் அமைந்த சிவனே என்று சிவனின் மீது உள்ள நம்பிக்கையை வெளிக்காட்டும் வகையில் அமைந்துள்ளது. இந்த மலையின் இடதுப்புறம் குளமும் வளதுபுறம் வயல்வெளியும் அமைந்திருக்கும் சிறப்பம்சம் உடையது.




இந்த கோவிலில் உள்ள தூண்கள் நான்கு முகம் கொண்டும் ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு சிற்பம் செதுக்கப்பட்டுயிருக்கும் கருவறையில் உள்ள பல்லவர் கால ஓவியம் தத்ரூபமாக காட்சியளிக்க கூடியது. இதில் பார்வதி தேவி, நடராஜர் சம்ஹார தாண்டவம் ஆடுவதை பார்ப்பது போன்று வரையப்பட்டிருக்கும். இங்கிருக்கும் பல சிலைகள் குடைவரை சிற்பமாக அமைந்திருக்கும்.





# புதிர் நேரம்


வேடன் ஒருவன் காட்டில் வேட்டையாடிய பறவைகளை ஒரு பையில் அடைத்து எடுத்துச் சென்றான். எதிரே வந்த நண்பன், "உன் பையில் மொத்தம் எத்தனை பறவைகள் உள்ளன?" என்று கேட்டான்.





ஆறைத் தவிர அனைத்தும் குருவிகள், ஆறைத் தவிர அனைத்தும் கிளிகள், ஆறைத் தவிர அனைத்தும் வாத்துகள்!" அப்படியானால், வேடன் பையில் இருந்த மொத்தப் பறவைகள் எத்தனை? ஒவ்வொரு வகையிலும் எத்தனை பறவைகள் இருந்தன?

# மறைந்த தமிழ்த் தூண்கள்





# கோ. நம்மாழ்வார்


கோ. நம்மாழ்வார் தமிழ்நாட்டின் முன்னோடியான இயற்கை விவசாய அறிஞரும் சமூக சிந்தனையாளரும் ஆவார். இவர் பாரம்பரிய வேளாண்மை, இயற்கை விவசாயம், விவசாயிகளின் சுயாதீனம் ஆகியவற்றை வாழ்க்கை முழுவதும் வலியுறுத்தி செயல்பட்டார். இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் தீமைகளை மக்கள் உணரும்படி செய்து, மண்ணின் இயல்பை காக்கும் விவசாய முறைகளை ஊக்குவித்தார்.

இவர் “ஒன்றுமில்லா விவசாயம்” ( ) என்ற கருத்தை தமிழ்நாட்டில் பரப்பியவர்களில் முக்கியமானவர். நாட்டுப் பசு, பஞ்சகவ்யம், இயற்கை உரங்கள், பாரம்பரிய விதைகள் ஆகியவற்றின் பயன்பாட்டை வலியுறுத்தினார். விவசாயம் ஒரு தொழில் மட்டுமல்ல; அது வாழ்க்கை முறை என்ற சிந்தனையையும் சமூகத்தில் விதைத்தார்.

கோ. நம்மாழ்வார் விவசாயிகளுக்காக பல பயிற்சிகள், கருத்தரங்குகள், களப்பணிகள் நடத்தி, ஆயிரக்கணக்கான இளைஞர்களையும் விவசாயிகளையும் இயற்கை விவசாயத்திற்கு வழிநடத்தினார். அவரது சிந்தனைகள் இன்று நிலைத்த வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முக்கிய வழிகாட்டியாகத் திகழ்கின்றன.







# ஓரிசா பாலு

ஒரிசா பாலு – தமிழையும் தமிழர்களையும் உலகளாவிய மேடையில் நிறுத்திய ஆய்வாளர்
ஒரிசா பாலு அவர்கள் ஒரு வழக்கமான கல்வியாளராக மட்டும் இல்லை.
தமிழ் மொழி, தமிழர் வரலாறு, தமிழர் நாகரிகத்தின் உண்மை அடையாளம் ஆகியவற்றைத் தேடி, அதிகாரப்பூர்வ வரலாற்றுக் கட்டமைப்புகளையே கேள்விக்குள்ளாக்கிய ஒரு அறிவுத் தேடலாளர்.

"தமிழ் ஒரு பிராந்திய மொழி அல்ல; அது ஒரு நாகரிக மொழி" என்ற ஆழமான நம்பிக்கையை தெளிவாகத் தெரியச் செய்தார்,

தமிழை மையமாக வைத்து அவர் செய்த முக்கிய ஆய்வுகள்



1. சிந்து சமவெளி நாகரிகம் – தமிழ்த் தொடர்பு ஆய்வு

2. வேத மைய வரலாற்றுப் பார்வைக்கு எதிரான கேள்விகள்

3. தமிழ் – உலக நாகரிக மொழி என்ற பார்வை

அவர் தமிழை இலக்கிய மொழி என்ற அளவில் மட்டும் பார்க்கவில்லை.

- விவசாயம்
- வானியல்
- கடல் பயணம்
- சமூக ஒழுங்கமைப்பு

இவற்றில் தமிழர்களின் பங்களிப்பு இருந்ததை ஆதாரங்களோடு எடுத்துரைத்தார்.

# நன்றி பங்களிப்பாளர்களே..!

**பொங்கல் ,**
**ஒப்பாரி பாடல்,**
**கவித்தொகுப்பு.**
ர.ரோஷினி


**அம்மானை விளையாட்டு,**
**பாரி வேட்டை**
நித்திக்ஷா மற்றும் ரூபிகா



**மறைந்த தமிழ் தூண்கள் ,**
**அகழ்வாராய்ச்சி,**
**பனைமலை கிரீஸ்வரர்**
**கோவில்**
ர. சந்திரகாந்த்

**மாத இதழ்**
**வடிவமைப்பு**
அகல்யா, சிலம்பரசன்

**மாத இதழ்**
**சரிபார்ப்பு.**
தமிழரசன்




அனைத்து தமிழ்
நெஞ்சங்களுக்கும் நன்றி!!!

6374666300

tqizhagaram@gmail.com

இந்த இதழ் பற்றிய தங்களின்
கருத்துக்களும்
விமர்சனங்களும்
வரவேற்கப்படுகின்றன